தேதி: 15.02.2023

வாக்குமூலம்

குற்றவியல் நடுவர் நீதிமன்றம் எண். 2, திருவைகுண்டம்

வழக்கு எண். CC.757/2022

வழக்கு சாட்சி எண். PW4

| | |
|---|---|
| பெயர்: லெட்சுமணன் | ஜாதி : |
| தந்தை பெயர் : | தொழில்: |
| கிராமம்: | சமயம்: |
| தாலுகா: | வயது: |

( எதிரிகள் 1,2 ஆஜர். எதிரி கள்3,4 ஆஜர் இல்லை. 3, 4 எதிரிகள் சார்பில் கு.வி.மு.ச. பிரிவு -317 ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது. )

முதல் விசாரணை :

(சாட்சி திறந்த நீதிமன்றத்தில் சம்மந்தப்பட்ட காவல்துறை அதிகாரியால் அடையாளம் காட்டப்பட்டு விசாரணை செய்யப்பட்டார்)

1. நான் தற்போது முத்தாலங்குறிச்சியில் குடியிருந்து விவசாய வேலை செய்து வருகிறேன் , என்னிடம் காட்டப்படும் மகஜரில் உள்ள 2 வது கையெழுத்து என்னுடையது தான் . 2 வது கையெழுத்து மட்டும் **அ.சா.ஆ 2** ஆகும். அதில் உள்ள சங்கதிகள் எனக்கு தெரியாது . சம்பவம் குறித்து போலீசார் என்னை விசாரித்தார்கள்

(அரசு தரப்பில் சாட்சி பிறழ் சாட்சியாக கருதி சாட்சியை பிறழ் சாட்சி என குறுக்கு விசாரணை செய்ய அனுமதி கோரி அனுமதியின் பேரில் குறுக்கு விசாரணை.)

அரசு தரப்பில் குறுக்கு விசாரணை.

2. கடந்த 08.06.2022 ம் தேதி காலை 8.00 மணிக்கு நான் மற்றும் சுடலைமணி ஆகிய இருவரும் நின்று கொண்டு இருந்த போது காவல் துறையினர் வரைந்த வரைபடத்திற்கு மகஜர் சாட்சியாக இருக்க

கேட்டுக்கொண்டதன் பேரில் சாட்சியாக கையொப்பம் செய்தேனா என்றால் இல்லை,

3. சம்பவ இடமான முத்தாலங்குறிச்சி தெற்கு தெருவில் உள்ள பிச்சம்மாள் வீட்டு அருகே உள்ள இடத்தில் வரைந்த வரைபடத்திற்கு சாட்சியாக இருந்து விட்டு தற்போது எதிரியை இந்த வழக்கிலிருந்து காப்பாற்ற உண்மைக்கு மாறாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை இல்லை

சாட்சி சொல்லியதை என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சியிடம் வாசித்து காண்பிக்கப்பட்டு அவர் சரியென ஒப்புக்கொள்ளப்பட்ட பின் கையொப்பம் பெறப்பட்டது.

ஒப்பம் /–
திரு. தே.மயில்சாமி.,
நீதித்துறை நடுவர் எண்.2,
திருவைகுண்டம்.

தேதி: 15.02.2023

வாக்குமூலம்

குற்றவியல் நடுவர் நீதிமன்றம் எண். 2, திருவைகுண்டம்

வழக்கு எண். CC.757/2022

வழக்கு சாட்சி எண். PW5

| | |
|---|---|
| பெயர்: சுடலைமணி | ஜாதி : |
| தந்தை பெயர் : | தொழில்: |
| கிராமம்: | சமயம்: |
| தாலுகா: | வயது: |

( எதிரிகள் 1,2 ஆஜர். எதிரி கள்3,4 ஆஜர் இல்லை. 3, 4 எதிரிகள் சார்பில் கு.வி.மு.ச. பிரிவு -317 ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது. )

முதல் விசாரணை :

(சாட்சி திறந்த நீதிமன்றத்தில் சம்மந்தப்பட்ட காவல்துறை அதிகாரியால் அடையாளம் காட்டப்பட்டு விசாரணை செய்யப்பட்டார்)

1. நான் தற்போது முத்தாலங்குறிச்சியில் குடியிருந்து விவசாய வேலை செய்து வருகிறேன், என்னிடம் காட்டப்படும் மகஜரில் உள்ள 1 வது கையெழுத்து என்னுடையது தான். 1 வது கையெழுத்து மட்டும் **அ.சா.ஆ 3** ஆகும். அதில் உள்ள சங்கதிகள் எனக்கு தெரியாது . சம்பவம் குறித்து போலீசார் என்னை விசாரித்தார்கள்

(அரசு தரப்பில் சாட்சி பிறழ் சாட்சியாக கருதி சாட்சியை பிறழ் சாட்சி என குறுக்கு விசாரணை செய்ய அனுமதி கோரி அனுமதியின் பேரில் குறுக்கு விசாரணை.)

அரசு தரப்பில் குறுக்கு விசாரணை.

2. கடந்த 08.06.2022 ம் தேதி காலை 8.00 மணிக்கு நான் மற்றும் லெட்சுமணன் ஆகிய இருவரும் நின்று கொண்டு இருந்த போது காவல் துறையினர் வரைந்த வரைபடத்திற்கு மகஜர் சாட்சியாக இருக்க

கேட்டுக்கொண்டதன் பேரில் சாட்சியாக கையொப்பம் செய்தேனா என்றால் இல்லை,

3. சம்பவ இடமான முத்தாலங்குறிச்சி தெற்கு தெருவில் உள்ள பிச்சம்மாள் வீட்டு அருகே உள்ள இடத்தில் வரைந்த வரைபடத்திற்கு சாட்சியாக இருந்து விட்டு தற்போது எதிரியை இந்த வழக்கிலிருந்து காப்பாற்ற உண்மைக்கு மாறாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை இல்லை

சாட்சி சொல்லியதை என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சியிடம் வாசித்து காண்பிக்கப்பட்டு அவர் சரியென ஒப்புக்கொள்ளப்பட்ட பின் கையொப்பம் பெறப்பட்டது.

ஒப்பம் /–
திரு. தே.மயில்சாமி.,
நீதித்துறை நடுவர் எண்.2,
திருவைகுண்டம்.

தேதி: 15.02.2023

வாக்குமூலம்

குற்றவியல் நடுவர் நீதிமன்றம் எண். 2, திருவைகுண்டம்

வழக்கு எண். CC.757/2022

வழக்கு சாட்சி எண். PW6

| | |
|---|---|
| பெயர்: ராஜாமணி | ஜாதி : |
| தந்தை பெயர் : | தொழில்: |
| கிராமம்: | சமயம்: |
| தாலுகா: | வயது: |

( எதிரிகள் 1,2 ஆஜர். எதிரி கள்3,4 ஆஜர் இல்லை. 3, 4 எதிரிகள் சார்பில் கு.வி.மு.ச. பிரிவு -317 ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது. )

முதல் விசாரணை :

(சாட்சி திறந்த நீதிமன்றத்தில் சம்மந்தப்பட்ட காவல்துறை அதிகாரியால் அடையாளம் காட்டப்பட்டு விசாரணை செய்யப்பட்டார்)

1. நான் தற்போது முத்தாலங்குறிச்சியில் குடியிருந்து கூலி வேலை செய்து வருகிறேன் , அ.சா.1 எனது உறவினர் அவரை எனக்கு தெரியும். கடந்த 04.06.2022 இரவு 8.00 மணிக்கு இருச்சக்கர வாகனத்தை தங்கராசு என்பவர் வீட்டு முன்பாக சுடலைமணி என்பவர் உள்ளே போகக்கூடாது என்று சொல்லி இருச்சக்கர வாகனத்தை நிறுத்தினார்.

2. சுடலைமணியிடம் தங்கராசு என்பவர் ஏன் இருச்சக்கர வாகனத்தை நிறுத்தியுள்ளாய் என்று கேட்டதற்கு சுடலைமணி , நல்லையா, மேகலா, அவரது வாரிசுகள் ஆகியோர் சேர்ந்து தங்கராசு மற்றும் பேச்சியம்மாள் இருவரையும் கல்லை வைத்து ஏறிந்து தலையில் காயம் ஏற்படுத்தினார்கள்.

3. நான் சம்பவ சமயத்தில் சம்பவ இடத்திற்கு கீழ் புறம் நின்று கொண்டு இருந்தேன். தங்கராசு என்பவரின் பேரன் செல்லத்தாய் என்பவரையும் கல்லை எடுத்து பல்லில் ஏறிந்து காயம் ஏற்படுத்தினார்கள் . பேச்சியம்மாள் என்பவருக்கு இடது பக்க தலையில் காயம் ஏற்பட்டது . பேச்சியம்மாள்

என்பவரை நல்லையா என்பவர் அடித்தார். எதிரிகளை பார்த்தால் என்னால் அடையாளம் சொல்லமுடியும். சாட்சி திறந்த நீதிமன்றத்தில் இரண்டு எதிரிகள் மட்டுமே வந்துள்ளதாக சொன்னார். மற்ற எதிரிகள் நீதிமன்றத்தில் ஆஜர் இல்லை. அவருடைய வருகையின்மையால் அடையாளம் குறித்து ஆட்சேபனை செய்யமாட்டேன் என்று மனு வாயிலாக தெரிவிக்கப்பட்டது போலீசார் என்னை விசாரித்தார்கள்.

குறுக்கு விசாரணை.

4. சம்பவம் நடந்ததாக சொல்லப்படும் நேரத்தில் நான் எங்கு இருந்தேன் என்றால் சம்பவ இடத்தின் அருகில் ஓரமாய் நின்று கொண்டு இருந்தேன். சம்பவ இடத்தில் இருந்து எவ்வளவு தூரம் தள்ளி நின்று கொண்டு இருந்தேன் என்றால் 5 அடி தூரம் தள்ளி நின்று பார்த்தேன்.

5. சம்பவ இடத்தில் இருந்து எனது வீடு எவ்வளவு தூரத்தில் உள்ளது என்றால் 20 மீ தூரத்தில் உள்ளது. எதிரிகளுக்கும் அ.சா.1 க்கும் இடையே ஏற்கனவே பிரச்சனை இருந்து வருகிறதா என்றால் இருந்து வருகிறது.

6. முத்தாலங்குறிச்சியின் பஞ்சாயத்து தலைவராக நான் 2012 ல் இருந்தேன் என்றால் சரிதான். அப்போது இருந்தே இந்த பிரச்சனை உள்ளது என்றால் சரிதான். நான் இருதரப்பிலும் மத்தியஸ்தம் செய்தேன் ஆனால் இரு தரப்பினரும் கேட்கவில்லை.

7. நான் இந்த பிரச்சனையில் தலையிட்டு என்ன மத்தியஸ்தம் செய்தேன் என்றால் பாகம் குறித்து மத்தியஸ்தம் செய்தேன். அவரவர் பாகத்தில் அவரவர் இருக்க வேண்டும் என்று கேட்டுக்கொண்டேன். நான் சொல்லி முடித்த மத்தியஸ்தத்தை எதிரி தரப்பு கேட்கவில்லை.

8. சம்பவ தினத்தன்று இருதரப்பினரும் மொத்தம் 20 க்கும் மேற்பட்ட நபர்கள் இருப்பார்களா என்றால் இருந்திருப்பார்கள். 20 க்கும் மேற்பட்ட

நபர்கள் பேசி சண்டைப்போடும் போது யார் என்ன பேசினார்கள் செய்தார்கள் என்று என்னால் குறிப்பிட்டு சொல்லமுடியாது என்றால் சரியல்ல.

9. 20 க்கும் மேற்பட்ட நபர்கள் யார் என்று குறிப்பிட்டு என்னால் சொல்லமுடியாது என்றால் சரியல்ல. சொல்லமுடியும் அவர்கள் எங்களது ஊரைச்சேர்ந்தவர்கள் ஆவார்கள்.

10. 20 க்கும் மேற்பட்ட நபர்கள் அடிதடி சண்டையில் ஈடுபட்டார்கள் என்னால் அவர்களுக்குள் செல்லமுடியவில்லை நான் அருகில் தான் நின்றேன் என்ற விபரத்தை எனது போலீசார் விசாரனையில் சொன்னேனா என்றால் சொன்னேன்.

11. சம்பவஇடத்திற்கு அருகில் யார் என்னுடன் நின்று கொண்டு இருந்தார்கள் என்றால் சுப்புத்தாய், லெட்சுமி ஆகியோர் நின்று கொண்டு இருந்தோம். நான் சம்பவஇடத்திற்குள் நான் செல்ல வில்லை என்றால் உள்ளே சென்றால் என்மீது காயம் ஏற்படும் என்பதால் தான் நான் சம்பவ இடத்திற்குள் செல்லவில்லை.

12. சம்பவம் நடந்ததாக சொல்லப்படும் நேரத்தில் நல்லையா உட்பட அவர்கள் மகன்களுக்கு காயம் ஏற்பட்டது என்றால் ஒரு மகள் சுகிர்தாவுக்கு மட்டும் தான் காயம் ஏற்பட்டு இருந்தது . நல்லையா என்பவர் மற்றும் அவரது இரண்டு மகளுக்கு காயம் என்பது எனக்கு தெரியுமா என்றால் தெரியும் அது அவர்களாகவே தாக்கியிருப்பார்கள்.

13. நான் யாரையாவது தாக்கினேனா என்றால் இல்லை. எனக்கு கால் நிற்க கூட முடியாது. அதனால் என்னால் யாரையும் தடுக்கமுடியாது . சம்பவத்தன்று எத்தனை மணி இருக்கும் என்றால் இரவு 8.00 மணி இருக்கும்.

14. சம்பவ இடத்தில் தெருவிளக்கு எதுவும் இல்லை என்றால் 10 அடி துாரத்தில் மின்விளக்கு உள்ளது . சம்பவம் நடந்த பிறகு ஆஜர் எதிரி

சம்மந்தமப்பட்ட உறுப்பினர்கள் எங்கள் ஊரில் இல்லை என்றால் சரிதான் . பிரச்சனை நடந்ததாக கூறும் தேதிக்கு பிற்பாடு இருதரப்பினரையும் மத்தியஸ்தம் செய்தேனா என்றால் செய்தேன் . ஆனால் இருதரப்பினரும் ஏற்றுக்கொள்ளவில்லை.

15. சம்பவத்தை நான் நேரில் பார்க்கவில்லை என்றால் சரியல்ல. அதனால் தான் சம்பவ இடத்திற்கு அருகில் தள்ளி நின்றதாக கூறுகிறேன் என்றால் சரியல்ல. உண்மையிலே சம்பவத்தன்று நல்லையா, அவரது இருமகள்கள் மற்றும் அவருடைய மகனுக்கு தான் காயம் நான் அதனை மறைத்து உண்மைக்கு மாறாக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

16. ஆஜர் எதிரிகள் முன்னதாக சென்று வழக்கு கொடுத்தார்கள் என்றும் அதனை நான் தடுக்கும் போது அவர்கள் என் பேச்சை கேட்கவில்லை என்பதால் தான் அவர்களுக்கு எதிராக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

17. நல்லையா என்பவரின் குடும்பத்தினர் என் மிரட்டலுக்கு பயந்து போய் தான் ஊருக்கு வரவில்லை என்றால் சரியல்ல. என் தூண்டுதலின் பேரில் இந்த வழக்கு பொய்யாக தாக்கல் செய்யப்பட்டு உள்ளது என்றால் சரியல்ல.

மறு விசாரணை இல்லை

சாட்சி சொல்லியதை என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சியிடம் வாசித்து காண்பிக்கப்பட்டு அவர் சரியென ஒப்புக்கொள்ளப்பட்ட பின் கையொப்பம் பெறப்பட்டது.

ஒப்பம் /-
திரு. தே.மயில்சாமி.,
நீதித்துறை நடுவர் எண்.2,
திருவைகுண்டம்.

தேதி: 15.02.2023

வாக்குமூலம்

குற்றவியல் நடுவர் நீதிமன்றம் எண். 2, திருவைகுண்டம்

வழக்கு எண். CC.757/2022

வழக்கு சாட்சி எண். PW7

| | |
|---|---|
| பெயர்: வேல்கனி | ஜாதி : |
| தந்தை பெயர் : | தொழில்: |
| கிராமம்: | சமயம்: |
| தாலுகா: | வயது: |

( எதிரிகள் 1,2 ஆஜர். எதிரி கள்3,4 ஆஜர் இல்லை. 3, 4 எதிரிகள் சார்பில் கு.வி.மு.ச. பிரிவு -317 ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது. )

முதல் விசாரணை :

(சாட்சி திறந்த நீதிமன்றத்தில் சம்மந்தப்பட்ட காவல்துறை அதிகாரியால் அடையாளம் காட்டப்பட்டு விசாரணை செய்யப்பட்டார்)

1. நான் தற்போது முத்தாலங்குறிச்சியில் குடியிருந்து விவசாய வேலை செய்து வருகிறேன் , அ.சா.1 யை எனக்கு தெரியும் . கடந்த 04.06.2022 ம் தேதி சனிக்கிழமை இரவு 8.00 மணிக்கு சுடலை மணி என்பவர் இருச்சக்கர வாகனத்தை வழியில் நிறுத்தி இருந்தார்.

2. தங்கராஜ் என்பவர் வந்து சுடலைமணியை வழியில் ஏன் இருச்சக்கர வாகனத்தை நிறுத்தி வைத்துள்ளார் என்று கேட்டார். அதற்கு சுடலைமணி அப்படி தான் இருச்சக்கர வாகனத்தை நிறுத்துவேன் என்று சொன்னார் . சுடலை மணி என்பவர் தங்கராஜை பார்த்து சுன்னி மகனே அப்படிதான் நிறுத்துவேன் என்று சொன்னார்.

3. சுடலை மணி என்பவர் தங்கராஜை ஓடி வந்து மிதித்து தள்ளி விட்டார் . சத்தம் கேட்டு வந்த அருகில் இருந்த சுடலை மணி அம்மா மேகலா, அக்கா செல்வசுந்தரி , அக்கா கிருஷ்ண வேணி, தங்கை சுவேதா, அப்பா நல்லையா

ஆகியோர் வந்து தங்கராஜ் என்பவரை மேற்சொன்ன அனைவரும் கையால் அடித்து காலால் மிதித்து , கீழே தள்ளி மேலே ஏறி மிதித்தார்கள்.

4. நானும், முத்தம்மாள், பேச்சியம்மாள், லெட்சுமணன், இராமன் ஆகியோர் சேர்ந்து நல்லையா குடும்பத்தை விலக்கிவிட்டோம். விலக்கிவிட்டு வந்த பிறகு சுடலை மணி , அம்மா மேகலா, அக்கா செல்வசுந்தரி , அக்கா கிருஷ்ண வேணி, தங்கை சுவேதா, அப்பா நல்லையா கல்லைத்தூக்கி விட்டு தங்கராஜை ஏறிந்தார்கள்.

5. வீட்டின் முற்றத்தில் உள்ள கல்லை பெயர்த்து எடுத்து ஏறிந்தார்கள் . அவ்வாறு ஏறிந்ததில் முத்தம்மாள் , பேச்சியம்மாள் , தங்கராஜ் ஆகியோருக்கு காயம் ஏற்பட்டது . முத்தம்மாள் என்பவருக்கு எதிரி தரப்பினர் அடித்ததில் மூன்று பற்கள் நொறுங்கி இரத்தம் வழிந்தது . பேச்சியம்மாள் என்பவருக்கு நெற்றி மற்றும் காலில் காயம் ஏற்பட்டது . தங்கராஜ் என்பவருக்கு கீழே போட்டு மிதித்ததில் உடம்பில் முழுவதும் காயம் ஏற்பட்டது.

6. அடிப்பட்டவர்கள் முதலில் திருவைகுண்டம் அரசு மருத்துவமனைக்கு சென்றார்கள். பிறகு காவல் நிலையத்திற்கு சென்றார்கள் . பிறகு மேல் சிகிச்சைக்காக திருநெல்வேலி அரசு மருத்துவமனைக்கு சென்றார்கள் . எதிரிகளை பார்த்தால் என்னால் அடையாளம் சொல்லமுடியும் . சாட்சி திறந்த நீதிமன்றத்தில் இரண்டு எதிரிகள் மட்டுமே வந்துள்ளதாக சொன்னார். மற்ற எதிரிகள் நீதிமன்றத்தில் ஆஜர் இல்லை . அவருடைய வருகையின்மையால் அடையாளம் குறித்து ஆட்சேபனை செய்யமாட்டேன் என்று மனு வாயிலாக தெரிவிக்கப்பட்டது போலீசார் என்னை விசாரித்தார்கள்.

குறுக்கு விசாரணை

7. எனது போலீசார் விசாரணையில் எனது முதல் விசாரணையில் சொன்னதை சொல்லி உள்ளேனா என்றால் சொல்லி உள்ளேன். போலீசார் என்னை எத்தனை முறை விசாரித்தார்கள் என்றால் என்னை எனது ஊரில் வைத்து சம்பவத்தன்று ஒரு முறை தான் விசாரித்தார்கள்.

8. சம்பவஇடத்திற்கும் எங்கள் வீட்டிற்கும் எவ்வளவு தூரம் என்றால் எதிர் எதிர் வீடு ஆகும். இந்த வழக்கில் காயம்பட்ட நபர் எனககு என்ன உறவு முறை என்றால் அக்கா – தங்கை உறவு ஆகும் . சம்பவம் நடந்ததாக கூறுவதற்கு முன்பாக என்ன பிரச்சனை என்று என்க்கு தெரியுமா என்றால் தெரியாது.

9. நான் எத்தனை ஆண்டுகளாக முத்தாலங்குறிச்சியில் வசித்து வருகிறேன் என்றால் 12 வருடங்களாக வசித்து வருகிறேன். முன்பாக சாட்சியம் அளித்த ராஜாமணி எனக்கு என்ன உறவு முறை என்றால் அண்ணன் உறவு முறை ஆவார் . அவர் கூறிய படி இடப்பிரச்சனை காரணமாக தான் பிரச்சனை என்றால் அது பற்றி எனக்கு தெரியாது.

10. எதிரிகளின் வீட்டிற்கு பக்கத்தில் உள்ள இடத்தை நான் மற்றும் எனது குடும்பத்தாரும் தான் ஆக்கிரமிப்பு செய்து வைத்து உள்ளேன் என்றால் இந்த சம்பவத்திற்கும் இடத்திற்கும் சம்மந்தமில்லை என்று சாட்சி பதிலளித்தார்.

11. இடம் குறித்து என்ன பிரச்சனை என்று எனக்கு தெரியாது . எனது கணவருக்கும் எதிரி தரப்பிற்கும் இடம் சம்மந்தமாக பிரச்சனை இருந்தது என்றால் சரிதான். அது ஏற்கனவே நடந்து முடிந்து விட்டது. இடம் குறித்து பிரச்சனை இருந்ததாக சொன்னார்கள் மற்றும் சமரசமாக சென்றதாகவும் சொன்னார்கள்.

12. சமரசமாக சென்றதால் தற்போது எங்கள் குடும்பத்திற்கும் எதிரி குடும்பத்திற்கும் சுமுகமான பேச்சுவார்த்தை உள்ளதா என்றால் இல்லை .

எதிரிகளிடம் இருந்து நிலத்தை அபகரிக்கும் நோக்கத்தில் தான் அவர்களை அடித்து விட்டு அவர்களுக்கு எதிராக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

13. இருச்சக்கர வாகனத்தை ஒருவர் நிறுத்தினார் என்றும் , அதனை மற்றொருவர் எடுக்க சொன்னதால் தான் பிரச்சனை என்று வழக்குக்காக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல.

14. எதிரி தரப்பினர் கொடுத்த வழக்கில் நான் எதிரியாக உள்ளேனா என்றால் நான் கிடையாது. ஆனால் எனது கணவர் உண்டு . 4 அல்லது 5 நபர்கள் மேல் வழக்கு தொடுத்து அது நிலுவையில் உள்ளது . சம்பவம் நடந்த அன்று நல்லையா , அவரது சுடலைமணி , அவரது இருமகள்களுக்கும் காயம் ஏற்பட்டு இருந்தது என்றால் அடித்து கிழே உருண்டதில் அனைவருக்கும் காயம் ஏற்பட்டது.

15. காயம்பட்ட உடனே அரசுமருத்துவமனைக்கு சென்றார்கள் என்றால் இல்லை. போலீசார் வந்த பிறகுதான் மருத்துவமனைக்கு சென்றார்கள் . அவர்கள் எத்தனை நாட்கள் உள்நோயாளியாக சிகிச்சையில் இருந்தார்கள் என்றால் 2 நாட்கள் இருந்திருப்பார்கள். சரியாக நினைவில் இல்லை. மருத்துவமனைக்கு சிகிச்சைக்கு சென்றவர்கள் மறுபடியும் ஊருக்கு திரும்பி வரவே இல்லை.

16. சம்பவத்தன்று எனது தரப்பினர் தான் எதிரி தரப்பினர் வீட்டிற்கு உள்நுழைந்து அடித்து கொலை மிரட்டல் விடுத்தார்கள் என்றால் இல்லை. அடிதடி சண்டையின் போது 30–40 நபர்கள் இருந்திருப்பார்களா என்றால் இருதரப்பினரும் தான் இருந்தார்கள் . கல் ஏறி விழுந்தவுடன் அனைவரும் ஓடி விட்டார்கள் அங்கு யாரும் இல்லை.

17. எனது தரப்பினர் கல் ஏறிந்ததால் தான் எனது தரப்பினருக்கு காயம் ஏற்படுத்திவிட்டுவிட்டு எதிரி தரப்பினர் மீது பொய்யாக சொல்கிறேன்

என்றால் சரியல்ல. என்னை இந்த வழக்கில் இருந்து காப்பாற்றுவதற்காக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

மறுவிசாரணை இல்லை.

சாட்சி சொல்லியதை என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சியிடம் வாசித்து காண்பிக்கப்பட்டு அவர் சரியென ஒப்புக்கொள்ளப்பட்ட பின் கையொப்பம் பெறப்பட்டது.

ஒப்பம் /–
திரு. தே.மயில்சாமி.,
நீதித்துறை நடுவர் எண்.2,
திருவைகுண்டம்.